# நிர்மல ஜோதி

திருமதி.நிர்மலா பஞ்சலிங்கம் B.A, Dip in Edu

உப அதிபர் அவர்களின்

# மணிவிழா மலர்



05-02-2016

வெளியீடு:

யாழ்/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

ராகம் :- மோஹனம்

தாளம் :- ஆதி (திஸ்ரம்)

**பல்லவி**

வாழ்க நல்லூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம் - எங்கள்
வாழ்வில் கல்வி கலைகள் தந்த
வண்டமிழ் அன்னையின் கோயில்

**அனுபல்லவி**

சூழ்க என்றும் கல்வி கலை
சோபித்திடும் கல்விக்கூடம்
ஆழ் கலைகள் பண்பு
அள்ளித்தரும் எங்கள் அன்னை (வாழ்க)

**சரணம்**

கற்பக விநாயகரின் கருணை வீதி உறைபவள்
இற்றரையில் கல்விக்கலை எமக்கு ஊட்டி மகிழ்பவள்
கற்றிடும் மாணவர்க்கு கனிந்து கல்வி கொடுப்பவள்
"கற்று ஆய்ந்து ஒழுகு" என்னும் கருத்தை அள்ளித் தருபவள்

அதிபரையும் ஆசிரியர் அனைவரையும் பணிகுவோம்
மதிநிறைந்த கல்வி கலை மகிழ்ந்தெமக்கும் தந்திடுவார்
பதியான தென்நல்லூர் பாங்கமரும் எங்கள் அன்னை
அதிஞானம் தந்தெமக்கு ஆசியருள் கலைமாதா. (வாழ்க)

ஆக்கம் :- **மஹாவித்வான் ந. வீரமணி ஐயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகி






மணிவிழா நாயகி நாயகருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற் செல்வர்



# கலாநிதி ஆறுதிருமுருகன்

### அவர்கள்

### வழங்கிய

## ஆசிச் செய்தி

ஆசிரியர்கள் பிறக்கிறார்கள். அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் என்றும் அனைவராலும் மதிக்கப்படுகிறார்கள். நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நல்லாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். மேலே குறிப்பிட்ட ஆசிரியர் ஆசிரிய இலக்கணத்திற்கு முற்றுமுழுதான பொருத்தமானவராக விளங்குபவர். இவர் கற்றல், கற்பித்தல் மட்டுமன்றி மாணவர்களின் மனிதாபிமானக் கடமைகளை நிறைவாகச் செய்து பல மாணவர்களின் இதயத்தில் குடி கொண்டவராக விளங்குகிறார். கடமையுணர்வும் சேவை மனப்பான்மையும் உடைய இவ் ஆசிரியையின் சேவைக்காலம் அர்த்தமுடையதாக அமைந்தது. அன்னாரின் பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர் நிலையை நோக்கியுள்ளமை இவரின் கல்வித் தர்மத்திற்கு அடையாளமாக மிளிர்கிறது. பாடசாலை சம்பிரதாயங்களை மிக நுணுக்கமாகப் பாதுகாத்தவர் இவர். இவரது சேவைக்காலம் விக்கினேஸ்வரா வித்தியாலயசமூகத்தால் என்றும் மறக்க முடியாத வரலாற்றுப் பதிவாகும். ஓய்வு பெற்றுச் செல்லும் அம்மையார் நல்லாரோக்கியத்துடன் சீரும் சிறப்பும் பெற்று நிறைவாக நீடூழி வாழ எல்லாம் வல்ல துர்க்கையம்பாளை மனதார வேண்டி நிற்கின்றேன்.

தலைவர்; சிவபூமி அறக்கட்டளை,
இளைப்பாறிய அதிபர்,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
சுன்னாகம்.

செஞ்சொற் செல்வர்,
**கலாநிதி ஆறுதிருமுருகன்,**
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்
# திரு. சு. சண்முககுமார்
## அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

நல்லூரின் பெருமையை எடுத்துரைக்கும் கல்விக் கூடத்தில் பல்லாண்டு காலம் கல்விப் பணியை உப அதிபர் என்னும் தகைமையில் கடமையாற்றி ஓய்வு பெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

மாணவர்களுக்கு வேண்டிய விடயங்களை உரிய நேரத்தில் வழங்கி அவர்களின் கல்விக்கு துணையாக நின்றமை போற்றுதற்குரியது.

மாணவர்கள் அனைவரையும் நன்கு தெரிந்து வைத்துள்ள உப அதிபர் மாணவர்களின் உடல உளத் தேவைகளை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்றவர்.

பாடசாலையின் சகல வழிகளிலும் அதிபருக்கு துணையாக நின்று கற்றல், கற்பித்தல், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை முன் நிற்பதற்கு உதவியவர்.

இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறையருள் வேண்டுகின்றேன்.

**சு. சண்முககுமார்**
B.A, Sc.Td, P.G.D.E.M.Ed
கோட்டக் கல்வி அதிகாரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வித்தியாலய அதிபர்

# திருமதி குககுமாரி விஜயரகுநாதன்

B.A, Dip. in Edu, M.Ed, M. Phi in Edu, SLPS

### அவர்கள்

### வழங்கிய

## அன்புமிகு வாழ்த்துக்கள்

எங்கிருந்தோ வந்து எம் வித்தியாலயத்துடன் ஒன்றித்து வாழ்நத உத்தமியின் பணியைப் போற்றி வாழ்த்துகிறேன். வித்தியாலயத்தில் என்றும் என் நண்பியாய், நல்லாசானாய், சேவையின் சேவகியாய் பண்பிலே பத்தினித் தெய்வமாய், பார்வையிலே பௌர்ணமியாய் பரிணமித்தவர் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம். வித்தியாலயச் சமூகத்தினரின் பயம் கலந்த மரியாதைக்குரியவர். பாகுபாடற்ற பாசம் எவரிடத்தும் பகிர்வதால் பலரது வாழ்விலும் பவ்வியமான இடம் இவருக்குண்டு. விக்னேஸ்வரா மாணவர்களுக்கு விடி வெள்ளியாக வந்தவர். தினமும் வித்தியாலய வாயிலில் காலை 7.00 மணிக்கே காட்சி தருபவர். மணிக்கூடு பிந்தலாம், மாரி மழை பொய்க்கலாம் எம் உபஅதிபர் பாடசாலைக்கு பிந்தி வந்ததும் இல்லை. சேவைக் காலத்தில் லீவை சலுகையாகப் பெற்றதுமில்லை.

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல், ஆலயங்கள் பதினாயிரம்
அமைத்தல் இன்ன யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற கவிஞன் வாக்கை வாழ்ந்து காட்டியவர்.

நல்லாசிரியர்களான தன் பெற்றொருக்கு நல்லகுல மகளாக நல் அதிபரான தன் கணவனுக்கு காரியங்கள் யாவிலும் கைகொடுக்கும் நன் மனையாளாக பஙசலிங்கங்களாக விளங்கும் புத்திரர் களுக்கு பாசமும், விவேகமும் பண்பும் சேர்த்து வழங்கும் நல்லன்னையாக பரிதவிக்கும் உறவினர்க்கு பாசமிகு நல்லுற்றாளாய் சமூகம் போற்ற வாழ்வாங்கு வாழும் எம் நிர்மலா பஞ்சலிங்கத்தை பல கோணங்களிலும் பார்த்து பயில்பவள் நான். எனது துணை அதிபராக அன்னார் முழுமையாகத் துணை நின்றவர். எனது கடமைகளை இலகுபடுத்தியவர். பாடசாலையில் வழமையாக ஏற்படக்கூடிய சிறுசிறு சலசலப்புகளையும் சப்தமின்றி அடக்கி விடுவார். ஒவ்வொரு மாணவரையும் அவர் சார்ந்த குடும்பப் பின்னணியையும் பக்குவமாக அறிந்து வைத்து பண்பாக வழிப்படுத்துவார். பெற்றோருக்கும் பேண்தகு வழிகாட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியர்களின் இன்ப துன்பங்கள் நாளாந்த செயற்பாடுகள் அனைத்திலும் நாற்றுணையாக மிளிர்பவர். கற்பித்தல் செயற்பாட்டில் கண்டிப்பும் கருணையும் கண்ணியமும் நிறைந்திருக்கும். அதற்கான நல்லறுவடைகளையும் சேவைக் காலத்திலேயே தான் பெற்ற பிள்ளைகளிடத்தும் தத்தெடுத்த பிள்ளைகளான மாணவரிடத்தும் கண்டு மனம் நிறைந்தவர். நல்லாசிரியருக்கு நல்லுதாரணமாக துணை அதிபருக்கு இலக்கணமாக விளங்கி இளைப்பாறும் இனியவரை இறையருளால் எல்லா நலன்களோடும் நிறைவாக நீடுழி வாழ வாழ்த்துகின்றேன். அவர் தம் பணியை வணங்கிப் போற்றுகிறேன். அவர் தம் குடும்பத்தவர் ஒவ்வொரு வரும் ஓங்கி வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்விக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

வித்தியாலய அதிபர்,

**திருமதி குககுமாரி விஜயரகுநாதன்,**

B.A, Dip. in Edu, M.Ed, M. Phil in Edu, SLPS

### சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

- அனைத்திலும் கடவுளைக் காண்பதுதான் மனிதனின் இலட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால் நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

- எண்ணமே நம்மில் தூண்டும் சக்தி. மனதை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள். நாட்கணக்காகச் சிந்தியுங்கள். தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா
வித்தியாலய முன்னாள் அதிபர்

# திருமதி வனஜா சண்முகானந்தன்

அவர்கள்

வாழ்த்துகிறார்

---

கடமை தவறாத கண்ணியமான ஆசிரியை திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்கள் சிறப்பாக தன் கல்விப் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறும் வேளை அன்னாரது சேவையை போற்றும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். யான் அதிபராக விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றிய எட்டு வருடங்களும் என்னோடு கடமையாற்றிய ஒரு சிறந்த ஆசிரியை திருமதி. நி. பஞ்சலிங்கம் அவர்கள். அவரிடம் நான் கண்ட சிறப்புக்கள் பற்பல முக்கியமாக எத்தருணத்திலும் எத்தனையோ குடும்பப் பொறுப்புக்கள் இருந்த வேளையிலும் தன் கஷ்டங்களை வெளியே காட்ட மாட்டார். நேரம் தவறாது பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவார். பாடசாலை நேரத்தில் ஒரு நிமிடத்தைத்தானும் வீணடிக்காது கற்பித்தலோடு மாணவர் நலன் பேணும் இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவார். எக்கருமத்தையும் தற்துணிவுடன் செயற்படுத்துவார். அவரது அர்ப்பணிப்பான சேவை மனப்பாங்கிற்கு அவரது பெற்றோர் ஆசிரியர்களாகவும், கணவர் நல்ல அதிபராகவும் விளங்கியதோடு அவர் பிறந்த மண் வாசனையும் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. அரிய சேவையாற்றிய ஆசிரியை திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் தன் ஓய்வு காலத்தில் சகல நலன்களுடனும் தன் சுற்றம் சூழ மகிழ்வாக நீடூழி வாழ வாழ்த்தி மகிழ்கிறேன்.

வித்தியாலய முன்னாள் அதிபர்,
**திருமதி வனஜா சண்முகானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர்
# திருமதி மி. விமலநாதன்
## அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

யா / நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராக பகுதித் தலைவராக, பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்களின் மணி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உள்ளப் பேருவகை அடைகின்றேன்.

ஓர் ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும். அவருடைய நடை உடை பாவனை எவ்வாறு மாணவர்களுக்கு முன்னுதாரணமானதாக இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஆசிரியை அவர்களாவார்.

நான் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றிய காலங்களில் எனது நிர்வாகத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு முதலியவற்றில் சிறந்து விளங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் பணியாற்றியவர் இவர் என்பதைச் சிறப்பாக சொல்லலாம்.

எந்த செயற்றிட்டங்களையும் ஏற்று பொறுப்போடு உரிய வேளையிலே நேர்த்தியாகச் யெ்து முடிக்கின்ற செயல்வீரம் கொண்டவர். ஆசிரியர்கள் மாணவர்களோடு இன்முகம் காட்டி இனிய சுபாவத்தோடு பழகுவதோடு பாடசாலையின் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன்னின்று உழைப்பவர்.

பாடசாலைச் சமூகத்தின் இன்ப துன்ப நிகழ்வுகள் அனைத்திலும் பங்கு கொள்கின்ற ஒரு பெருந்தகை தமிழ் மொழிப் பாடத்தை மாணவர்கள் மனங்கவரும் வண்ணம் கற்பித்து க.பொ.த சாதாரணதரத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற வழிசமைத்தவர் என்பவர் குறிப்பிடத்தக்கது.

அவகை அறுபதில் ஓய்வு பெறும் இவர் தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கிறேன்.

**அதிபர்**
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற ஆசிரியை

# திருமதி யோ. உபயசேகரம்

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

---

### சேவை மனப்பாங்குடன் கடமையாற்றிய ஆசிரியப் பெருந்தகை

திருமதி நிர்மலா பஞ்சலிங்கம் அவர்கள் 1996ம் ஆண்டு எமது பாடசாலையில் கடமையாற்ற காலடி எடுத்து வைத்தார். அவர் வந்த வேளையில் இடப்பெயர்வினால் பல இன்னல்களுக்கு உட்பட்டிருந்த எமது மாணவச் செல்வங்களிடம் மிகுந்த கனிவுடன் அவர்கள் மனதில் பதியும் வண்ணம் தமிழ் பாடத்தை சிறப்பாகப் போதித்தார். அத்துடன் நில்லாது அவர்கள் நல் ஒழுக்கத்துடன் திகழ வேண்டும் என்றும் அயராது பாடுபட்டார். அவர் வருகையின் பின் தமிழ்ப் பாடத்தின் பெறுபேறு மேன்மையடைந்தது.

அவர் பாடசாலையில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சிறப்புடன் பணியாற்றினார். அத்துடன் சகல ஆசிரியர்களையும் தன் சகோதரர்களாகப் பாவித்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றியதுடன் அவர்கள் துயர்துடைக்க தன்னால் ஆன எல்லாக் கருமங்களையும் சிறப்புடன் செய்தார். பாடசாலைச் சமூகத்துடன் ஒத்துழைத்துப் பாடசாலை மேம்பாட்டுக்காக பாடுபட்டார்.

சிறந்த நற்குணங்களுடைய எமது ஆசிரியை சீரும் சிறப்பும் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

ஓய்வு பெற்ற ஆசிரியை

**திருமதி. யோ. உபயசேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக ஆசிரியை

# திருமதி வா. பரமநாயகம்

அவர்கள்

வழங்கிய

வாழ்த்துச் செய்தி

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்

அன்பின் ஊற்றாய் பண்பின் உறைவிடமாய் மனிதநேயத்தின் சிகரமாய் பொறுமையின் சின்னமாய் கலங்கரை விளக்காய் நின்று என்றும் வழிகாட்டிய உத்தமியே!

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியராய் உபஅதிபராய் இருந்து மாணவச் செல்வங்கள், கல்வியில் பண்பினில் உயர்ந்து வளர அயராது உழைத்தவரே!

அகவை அறுபதில் வாழ்த்துகிறேன். அகமகிழ்ந்து உங்கள் எதிர்காலம் மேலும் சிறக்க இறை ஆசி பெற்று குடும்பத்துடன் நலமாக வாழ மனதார வாழ்த்துகிறேன். பல்லாண்டு வாழ்க வாழ்க!

**திருமதி. வா.பரமநாயகம்**

ஆசிரியர்

திருத்தக் கூடியவற்றைத் திருத்தும் தைரியமும்
திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளும்
மனப் பக்குவத்தையும் - இவ்விரண்டிற்கும் உள்ள
வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் அறிவையும் எனக்கு அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்ற ஆசிரியை

# திருமதி சி. இரகுநாதன்

### அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

---

## திருமதி நி. பஞ்சலிங்கம் ஆசிரியை பற்றிய சில வரிகள்

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது எனும் ஔவையாரின் வாக்கிற்கு இணங்க இவ்வுலகிலே மானிடராக பிறந்த நாம் ஒவ்வொருவரினதும் தொழில்களில் சிறந்த தொழில்களில் ஒன்றாக ஆசிரியத் தொழில் விளங்குகின்றது. எனவே அந்த அற்புதமான சேவையினை ஒவ்வொரு ஆசிரியருக்கும் இறைவன் வரப்பிரசாதமாக வரம் கொடுத்திருக்கின்றான் என்றால் மிகையில்லை. அந்த வகையில் திருமதி பஞ்சலிங்கம் ஆசிரியர் அவர்கள். "செய்யும் தொழிலே தெய்வம்" எனும் கூற்றுக்கு அமைவாகவும் மிகச் சிறப்பான சேவையினை ஆற்றியிருக்கின்றார் எனக் கூறினால் ஐயமில்லை.

மேலும் ஒவ்வொரு மாணவரினதும் வாழ்விலும் ஒழுக்கம் மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. அந்த வகையில் ஒழுக்கத்திற்கு உரிய ஆசிரியராக எமது பாடசாலையில் பணியாற்றியது மட்டுமன்றி மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தை வளர்த்தெடுத்த ஆசிரியையாகவும் மாணவர்களை நன்கு புரிந்து கொண்ட ஆசிரியராகவும் மிகவும் பொறுமையுள்ள ஆசிரியையாகவும் சகல துறைகளிலும் திறமையுள்ள ஆசிரியராகவும் மாணவர்கள் மத்தியில் பய உணர்வை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலையும் கொண்ட ஆசிரியராகவும் திருமதி பஞ்சலிங்க ஆசிரியர் அவர்கள் திகழ்ந்தார் என்பதில் எவ்வித ஐயமில்லை.

இவ்வாறு பல விடயங்களில் முன் மாதிரியாகத் திகழ்ந்த ஆசிரியர் ஒருவர் எமது பாடசாலையை விட்டு விடை பெறுவதை நினைத்து கவலையடைவதை விடுத்து அவர் பெருமைப் படும் அளவிற்கு எமது மாணவர்கள் ஒழுக்கத்தை தவறாது கடைப்பிடிக்க வேண்டும் எனவும் நன்கு கல்வி கற்று உயர வேண்டும் எனவும் மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் அவரைப் போலச் சிறந்த சேவையினை ஆற்றுவதே அவரின் விருப்பமாகவும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அந்த விருப்பத்தை எனது ஆசிரியர் குழாம் நிறைவேற்றும் என நம்பிக்கை கொள்வதோடு திருமதி நிர்மலா பஞ்சலிங்கம் ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலையை விட்டுச் சென்றாலும் அவரின் அளப்பரிய சேவை எமது நெஞ்சை விட்டு அகலாது என்பதை நினைவுபடுத்தி காலத்தின் கட்டாயத்திற்கு அமைவாக எனது சிறிய உரையினை முடித்து விடை பெறுகின்றேன்.

பழைய மாணவியும்
ஓய்வு பெற்ற ஆசிரியையுமான
**திருமதி. சி. இரகுநாதன்**

---

- ♣ கல்வி குழந்தைகளது இளமைப்பருவத்தினின்று தொடக்கப் பெறுதல் வேண்டும்.
- ♣ கல்வி வாழ்க்கை இலட்சியங்களை அடைவதற்கான கருவி.
- ♣ கல்வி பட்டை தீட்டத்தீட்ட ஒளிவிடும் வைரம்
- ♣ கல்வி இல்லாத மனிதன் செப்பம் செய்யப்படாத சலவைக்கல் போன்றவன்
- ♣ முதலில் நம்மைப் படித்துக்கொள்ள வேண்டும்.
- ♣ கல்வியின் வேர்கள் கசப்பானவை கனிகள் இனிப்பானவை.
- ♣ கல்வியின் நோக்கம் சமயச் சார்பு அற்றதாக இருக்க வேண்டும்
- ♣ சரியான முறையில் வாழ வழியினைக் கண்டுபிடிப்பது வாழ்க்கையின் பொருளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்வது ஆகியவற்றிற்கான ஒரு தோட்டமே கல்வியாகும்.
- ♣ இந்த உலகில் அதிசயமாக மாற்றங்களை உண்டுபண்ணக் கூடிய வல்லமையுள்ள கல்வி மட்டுமே.
- ♣ ஒருவன் பிறருக்குப்பாடம் நடத்துவது உண்மையில் தான் கற்பதற்காகத்தான்.
- ♣ எப்படிப்பட்ட மேதை என்றாலும் அவர் எடுத்து வைக்கும் முதற்படி ஆரம்பப்பள்ளிதான்
- ♣ படிப்பு ஆழமாக ஆழமாகத்தான் எளிமை பிறக்கும்
- ♣ படிக்கப்படிக்கத்தான் அறியாமையின் அகண்டமும் தெரியாது நிரம்பவுள்ளது என்பது தெரிய வரும். கல்வியுடன் அறிவும் கேள்வியும் வேண்டும். இம் மூன்றும் இணைந்து செயற் பட்டாலன்றி அறிவியல் அசைவு ஏற்படாது.
- ♣ துணியைச் சலவை செய்ய சவர்க்காரக்கட்டி பயன்படுவது போல மூளையைச் சலவை செய்ய இன்றைய கல்வி பயன்படுகிறது. உண்மையான கல்வி மனதையும் சலவை செய்யும்.
- ♣ நாட்டிலுள்ள கல்விநிலையங்களை ஒரு கண்ணாக கருதுவோமானால் சமுதாயத்தின் மறுகண் நூலகங்களாகும்.
- ♣ மாணவன், ஆசிரியர், நிர்வாகம் என்ற மூன்று பகுதிகளும் ஒருங்கிணைந்த இயந்திரமே பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக ஆசிரியை

# திருமதி அ. மகேந்திரராஜா

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

## பசுமையான நினைவுகளை நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன்

இலங்கைத் தீவின் வட புலத்தில் பெருமையும் மதிப்பும் மிகுந்த சப்த தீவுகளில் ஒன்றானதும் மனதிற்கு மகிழ்வும், மனிதப் புலன்களுக்கு ஒரு புதிய உணர்வையும், எழும் எண்ணாங்களுக்கு இனிய சுகத்தையும் அள்ளிக் கொடுத்த புண்ணிய பூமி புங்குடுதீவு.

அங்கு.....

திரு. திருமதி. மாணிக்கம் (ஆசிரியர்கள்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியாக அவதரித்தவர் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்கள். அவருடன் நீண்ட காலம் பழகியவர் என்ற வகையில் அந்த பசுமையான நினைவுகளை நினைவு கூர்வதில் பெருமையடைகின்றேன்.

கல்விப் புலத்தோடு தொடர்புடைய ஆசிரிய குடும்பத்தில் பிறந்து ஆசிரியராக வாழ்ந்து இன்று மணி விழாக்கண்டு ஓய்வு பெறுகின்றார். அவர் தம் கணவரும் கல்விப் புலத்தோடு தொடர்புடையவர் நீண்டகாலம் கணித ஆசானாகவும், அதிபராகவும் உயர்ந்து தனது சொந்த ஊரில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

அறங்கள் யாவினும் புண்ணியம் கோடி" என்னும் பெரும் இலச்சியத்தை இலக்காகக் கொண்டு இயங்கி வந்தவர்கள் திரு. திருமதி பஞ்சலிங்கம் குடும்பத்தினர்.

திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்கள் மிகவும் எளிமையான சுபாவம் கொண்டவர். அறிவுத் திறனும் நிர்வாகத் திறனும் ஒருங்கே கொண்டவர். தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரிலும் அக்கறை கொண்டவர். பாடசாலையின் கல்விச் வெயற்பாடகளில் மட்டுமல்லாது பௌதிக வளங்களை அதிகரிப்பதற்கும் பெரு முயற்சி செய்து வெற்றி கண்டவர்.

மாணவர்களின் வெற்றியிலும், அவர்களின் ஆளுமைத் திறனை வளர்ப்பதிலும் முன்னின்று உழைத்தவர். கற்பித்தலைக் கசடறக் கற்பித்து கற்றவழி நிற்கும் நல்லதொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்கிய உன்னதமான கைங்கரியத்தை கடந்த காலங்களில் மேற்கொண்டவர்.

அன்பு, அமைதி, அடக்கம், பணிவு, நேர்மை, நல்லொழுக்கம் முதலான நற்பண்புகள் நிரம்பிய நல்லாசிரியராக விளங்கியவர். சிரிக்க, சிந்திக்கக் கதை கூறி கற்பிக்கும் யுக்தியைக் கையாண்டவர்.

என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாக்குக்கு இணங்க தனது குடும்பத்தை விட இப்பாடசாலையே தனது குடும்பமெனக் காத்துக் கல்விப் பணிக்காகத் தனது ஓய்வுக் காலம் வரை தியாகம் செய்த உத்தமப் பெண்மணி இவர்.

பல துறைகளிலும் மிளிரக் கூடிய வகையில் பல கல்வி மான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். சமூகத்தில் நற்பிரசைகளாகவும் ஒழுக்க சீலர்களாகவும் இன்றும் அவர் பெயரையும் பணியையும் நினைத்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர் பலரை நான் அறிவேன். தன்னலமற்ற அவர் தம் பணியினால் அவரின் பிள்ளைகளும் ஒழுக்க சீலர்களாகவும், ஆளுமைத்திறனும் நம்பிக்கையும் கொண்டவர்களாகவும், மானிட வாழ்வின் நிலையான செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்றவர்களாகவும் சீரும் சிறப்புடனும் வாழ்வதை என் மனதார மனமகிழ்வோடு இந்நன்னாளில் நினைவு கூருகின்றேன்.

"பொன்னான இந்நாளில் மணிவிழாக் கண்டு
பொலிவுற்றிருக்கும் நிர்மலா பஞ்சலிங்கத்திற்கு என் இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்

**திருமதி. அ.மகேந்திரராசா**

சக ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் நலன்புரிக்கழகத் தலைவர்

# திரு. சி. கருணாகரன்

## அவர்கள்

### வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

## மணி விழா நாயகியை மனமார வாழ்த்துகின்றோம்

எதிர்வரும் 05.02.2016 அன்று தனது 33 வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்துள்ள மதிப்பிற்கும், அன்புக்கும் பண்புக்கும் உரிய எமது உபஅதிபர் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் எமது ஆசிரியர் நலன்புரிக்கழகம் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றது.

இவர் எம் அனைவருக்கும் ஓர் உப அதிபராக மட்டுமல்ல, ஆசிரியராக, தாயாக, சகோதரியாக, வழிகாட்டுபவராக பற்பல பன்முக ஆளுமைகள் உடையவராகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது.

ஒரு பெண்ணுக்கே உரிய நற்குணங்களாகிய நாற் குணங்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் ஆசிரியராவார்.

இவரது சிறப்பான நல் அம்சம் என்னவெனில் பணிய வேண்டிய சந்தர்ப்பங்களில் பணிந்தும், துணிய வேண்டிய சந்தர்ப்பங்களில் துணிந்தும் கருமமாற்றக் கூடிய வல்லமையேயாகும்.

சிறந்த வாசிப்பு ஆற்றல் கொண்ட இவர் மாணவர்களுக்கு மிக அன்பாகத் திறம்படக் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்விச் செல்வத்தை வழங்குவதால் "தர்மம் தலை காக்கும்" என்பார்கள். எனவே "இவரது கல்வித் தர்மம் இவரது தலைமுறையையே காக்கும்" எனவும், இவரது ஓய்வுக்காலம் கணவன், பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரதும் சார்பாக யான் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**திரு. சி. கருணாகரன்**
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி யோகினி சிவானந்தன்

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி



## தலைமகளே நீ வாழ்க

இட்ட அடி பெரிதுவக்கும் தொட்ட பணி சாயும் வேளை
புவனமது நிலைத்ததுவோ பூ மகளின் ஓய்வு கண்டு
கல்வி தன் கண்ணெனவும் கடமையே தம் கருத்தெனவும்
கலைமகளை விலை பேசா தலைமகளே நீ வாழ்க.

அன்புக்கு இலக்கணமாய் நின்றுழைத்த நல்லாளே
பண்புக்கும் பணிவுக்கும் சிறந்ததொரு வல்லாளே
எண்ணுக்கும் எழுத்துக்கும் உயிர்கொடுத்த சொல்லாளே
எண்ணத்துள் எந்நாளும் நிறைந்திருக்கும் செயலாளே.

மாணவரின் கல்வியதே கடமையெனக் கொண்டு
பேணியவர் குறை களைந்து மன மகிழ்ந்து நின்று
ஏணியென அவருயரத் தன்னையுருக்குகின்ற
காணரிய ஆசிரியப் பெருந்தகையே நிர்மலா நீ வாழ்க.

சிவந்த விழி நீர் உமிழ கனத்த மனம் கடிவாளமிட்டு
நிலை மறைத்து சிரிக்கின்றேன் போலியாய்
ஒப்பற்று சிறக்கட்டும் உம் ஓய்வு காலம்
நீர் நிகரற்ற அம்பிகையின் அருள் பெற்று நீடூழி வாழ்க... வாழ்க.....

**திருமதி. யோகினி சிவானந்தன்**

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி பாலசுப்பிரமணியம்

## அவர்களின்

### வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

---

## ஆளுமை மிக்க எமது உப அதிபர்

என்றும் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எமது உப அதிபர் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்களை இந் நன்நாளில் வாழ்த்துவதில் பேரு வகையடைகின்றோம்.

நேரம் தவறாமை கண்டிப்புடன் கூடிய அன்பு தவறுகளை மன்னித்து அரவணைக்கும் பண்பு, மற்றையோரின் இன்ப துன்பங்களில் முன்னின்று உதவிடும் மனப்பாங்கு போன்ற இன்னோரன்ன மனித நேயப் பண்புகளைக் கொண்டவர் தான் எமது உப அதிபர் திருமதி. நி. பஞ்சலிங்கம் அவர்கள். இவர் எமது பாடசாலை மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரினதும் குடும்பப் பின்னணியை நன்றாக அறிந்து வைத்திருப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டவராவார். எமது உப அதிபர் எமது பாடசாலையில் சேவையாற்றிய காலம் எமது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது முதுமொழி திரு. நா.பஞ்சலிங்கம் அவர்கள் ஒரு கண்ணாகிய எண் அறிவையும், திருமதி. நி. பஞ்சலிங்கம் அவர்கள் மறு கண்ணாகிய எழுத்தறிவையும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குழந்தைகளுக்கு வாரி வழங்கியதன் பயனாக இன்று அவர் தம் பிள்ளைகள் ஐவரும் கல்வியிலும், ஒழுக்கத்திலும் மேன்மையுற்று விளங்குவது கண்கூடு.

எமது உப அதிபர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் தமது அனுபவங்களையும் ஆலோசனைகளையும் என்றும் எமக்கு வழங்கி உதவுவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவர் தமது வாழ்க்கைத் துணைவருடனும், பிள்ளைகளுடனும் சகல சிறப்புக்களையும் பெற்று மகிழ்வதுடன் நீடூழி வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்.

அன்புடன்

**திரு. திருமதி. பாலசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி கி. கஜவதனன்

அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

---

## மணி விழா நாயகிக்கு

கல்வியிலே கலைமகளாய்
கல்விக் கூடமதில் நல்லாசானாய்
கடமைதனில் கண்ணியமாய்
மனைதனிலே நல் இல்லாளாய்
அகமகிழ்ந்து சேவை செய்தீர்

அகவை அறுபதில் ஓய்வு பெறும்
வேளையில் இன்பமாய் இருந்திட
சௌபாக்கியங்கள் பல பெற்றிட
சமூக சேவைகள் தொடர்ந்தும் செய்திட
வாழ்த்தி நிற்கின்றேன் உமை, மணி விழா நாயகியே!
வாழ்க பல்லாண்டு.

**திருமதி. கி.கஜவதனன்**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி ச. புவியரசி

## அவர்கள்

### வழங்கிய

## பாராட்டுப் பா

---

இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிரும்
இலங்கைத் தீவின் கண் - இலங்கும்
நல்லதோர் ஊரான புங்குடுதீவினிலே
வள்ளுவர் வகுத்த வழி வாழ்வாங்கு வாழ்ந்திட்ட
நல்லதோர் மாணிக்கம் நங்கை
நல்லாள் நாகம்மா தம்பதிக்கு
இறையருள் இனிதுற்று ஆயிரத்துத்
தொளாயிரத்து ஐம்பத்தாறினிலே
மாசித் திங்கள் ஐந்தாம் நாளதனில்,
நிர்மலா எனும் நல் நிர்மல நாமம்
கொண்டு நல்மகவாய் அவதரித்தார்
நம் ஆசான்

அழகுடன் அறிவும் ஆழ்ந்த நற் தமிழ்ப்புலமையும்
சிறப்பான செந்நெறி சீர் மிகு அறமும் கொண்டு,
ஊர் உறவு போற்ற கலைகள் பல கற்று
அகவை ஈர்பதின் மூன்றதில் அவர் பெற்றார்
ஆசான் எனும் புதிய பட்டம்
அத்தோடு நின்றிடாமல் பஞ்ச பூத நாயகனின்
வழி வந்த இளஞ் செம்மல் பஞ்சலிங்கம் - எனும்
நல்லான் கரம் பற்றி ஈன்றிட்டார் பஞ்ச பாண்டவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிட்ட பட்டம் எல்லாம் பெயருக்கே

என்றிராமல் மாணவி பலர் வாழ்வில்

அருள் விளக்கேற்றிட்டார்.

கண்டிபோய்க் கதைத்து காலத்தைக் காட்டிவிட்டால்

அன்பும் கண்டிப்பும் ஆசான் இவர்

இரு கண்கள் - அவை

கலியுகத்து மாணவரைக் காப்பாற்றும்

இரு கரங்கள் இரண்டிலும் அகப்பட்டு

சீர் பெற்றார் மாணவர்கள்

இவ்வழியே அளப்பருஞ் சேவை செய் ஆசான்

நல்லூர் பதியிலங்கும் (தென்) நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வராவில்

அகவை அறுபதுற்றார் - என் சொல்வோம்

ஆண்டவனே! ஆபத்தில் ஆறுதல் சொல்

தாயவரை நாமும் பிரிய விதி வகுத்தாய்

ஓரிரு வருடம் சேவை நீடிப்பை வழங்கும்

சட்டத்தை ஏன் நீ வழங்கவில்லை?

நல்ல மனங்களை நாடி நயம் பெறு முன்

பாதியிலே பிரித்து விட்டு மேதினியில்

நாம் படும் பாட்டைப் பார்த்து இரசிப்பாயோ?

நின்னுடைய விளையாட்டு இப்படியே தானென்றால்

எனக்கும் வரமொன்று தந்து விடு.

" மாணாக்கர் மனம் விளங்க வாழ்ந்திட்ட ஆசான்

ஆசான்கள் குலம் விளங்க அறிவுரைத்த ஆசான்

தன்குறை நீங்கிக் குலம் விளங்க

மனம் குளிரும் மங்கலங்கள் எல்லாம் சேர்ந்துவர

உற்றம் சுற்றத்துடன் கூடிக் களித்திருக்கும்,

உன்னதமான வாழ்வை உண்மையாய் அருளிடு

இதுவே நின்னடியாள் தன்னாசானுக்காய்

வேண்டும் அரிய வரம், எனக்கேட்டு

விழி நீரை விரட்டி விடை பெறும் சக ஆசான்

**திருமதி. ச.புவியரசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக ஆசிரியை

# திருமதி நி. ஜெயபதி

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

### வாழ்க வளமுடன்....

இதயக் கமலமதில் உறையும்
இன்பத் தமிழமுதே
இன்முகம் காட்டி எமை அணைக்கும்
அன்புத் திரு உருவே
பஞ்சலிங்கம் மிஸ் என்று நாம்
பெருமையோடழைக்கும் பண்பின் பேருருவே
பாசத்தின் இருப்பிடமே எம்
பள்ளித் தோட்டத்தின் வண்ணத்துப்பூச்சியே
புங்குடுதீவு பெற்ற புன்னகையே
பாங்காய் எம்மோடு பணியாற்றிய
பண்பின் பேருருவே பஞ்சலிங்கம் அம்மா
வாழ்க வளமுடன் என வழியனுப்புவதா
இல்லை வேண்டாம் போக என வழிமறிப்பதா
பேதலிக்குதம்மா எம் பேதையுள்ளம்
ஆசிரிய நண்பர்களை அன்பாய் அணைத்து
அவர் குறை அறிந்து ஆறுதல் அளித்து
இன்ப துன்பங்பளில் ஒன்றாய் கலந்து
எம் குடும்பங்களில் ஒருவராய் வாழ்ந்தீரம்மா
நீரில்லா எம்பள்ளி இனி வெறுமையம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வித்தகர்கள்
பல தோன்ற வித்திட்ட வண்ணமலர் நிர்மலா அம்மா
இன்று விதி விட்ட காலத்தின் கட்டளையை
விருப்புடன் ஏற்றுப் பின்னவர்க்கு வழிவிட்டு
தன் மன்னருடன் கைகோர்த்து
எமைப் பிரியாமல் பிரிந்து செல்கின்றார்.
மகிழ்வாக நாம் அவரை / விழிகளில் நீர் தொடுத்து
கரங்களில் மலர் கொடுத்து
சிரமதில் மலர் தூவி
மங்களமாய் வாழ்த்தி
மகிழ்வோடு வழியனுப்புகின்றோம்.

**திருமதி. நி. ஜெயபதி**
ஆசிரியர்

**சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்**

- உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர் களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி சு. கமலேஸ்வரன்

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

---

### மணி விழாவின் சுடரொளி

அன்பிற் கினிய நிர்மல ஜோதியே
உம் வாழ்நாட் காலமதில்
கல்விப் பணிக்காய் அர்ப்பணித்த
உம் சேவைகளின் உயர்வோ விண்ணளவு

தினம் உம் வரவை எதிர்பார்க்கும் எம் பள்ளி
கம்பீர நடையுடன் கடைக்கண் பார்வையை
நித்தமும் பாரத்திங்கே மகிழ்ந்திட்டது
வதனமுகம் தெரியும் அழகிய புன் சிரிப்பிலே
கனிவான பேச்சின் சாயலைக் கண்டோம்.

தமிழின் இனிமையே தமிழின் அற்புதமே
தமிழுக்காய் வாழ்ந்து தமிழை அர்ப்பணித்தீர்
உம் சேவையின் வரமே தனி உரம்
நீர் செல்லும் பாதையெல்லாம் உம் பேர் ஒளிரும்
வாழ்க என்றும் உம் சேவை!

**திருமதி. சு.கமலேஸ்வரன்**

ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி சைலஜா இரவிச்சந்திரன்

அவர்கள்

வழங்கிய

வாழ்த்துச் செய்தி

## தேடுது எம் விழிகள்

சொல் விற்பனங்கள் கொண்ட சோர்விலாத் தாயே
கல்விப் பணியின் கலங்கரை விளக்கே
குறையற நிறை பணி செய்தவரே
விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வித்தகியே
ஈர்பத்து வருடங்கள் இணையில்லாச் சேவையில்
இணைத்திட்ட சரித்திரப் புயலே
அறிவுப் பசி தேடி வந்த மழலைகளை
அன்புடன் அணைத்து செம்மொழியாம்
தமிழ் மொழியை சுவைபட ஊட்டிய தாயே
நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும்
தளரா உறுதியும் கொண்டவரே
ஆசிரிய நெஞ்சத்தின் நிறைந்த சுடரொளியே
நீரெமைப் பிரிய நேரம் தான் வந்ததுவோ
உறவென்றால் பிரிவு நிஜம் என்ற
உண்மையின் தத்துவத்தை
உணர மறுக்குதம்மா என் மனம்
நீரில்லா எம்பள்ளியது பாலைவனம் போலாகுதம்மா
நீரமர்ந்த இடமிங்கே
வெறுமையாய் இருக்குதம்மா
அலுவலகம் நுழைந்ததுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையே உமைத்தேடி

அலையுது எம்மிரு விழிகள்

துணிவுடன் முடிவெடுத்து தீரமுடன் செயற்படும்

திறன் கண்டு பலமுறை திகைத்து நின்றோம்

பாங்குடனே பாரினிலே புகழுடன் நீர்

வாழ்க வளமுடன் என வண்ணத்தமிழில்

வாழ்த்தி நிற்கின்றோம்.

**திருமதி சை. இரவிச்சந்திரன்**

சக ஆசிரியர்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

- அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு இதயம் உங்களை அழைத்துக் கொண்டு போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி அ. செ. சாள்ஸ்

**அவர்கள்**

**வழங்கிய**

## வாழ்த்துச் செய்தி

---

**மணி விழா நாயகிக்கு மனம் நிறைந்த வாழ்த்து மாலை**

கடமையிற் தவறா நேர்மை
கன்னித்தமிழ் பாடம் சொல்லும்
முறைமையிற் தனிச் சிறப்பு
பழகிடும் பண்பில் அன்பு
உடைமையாய்க் கொண்ட மேன்மை

உளம் தொடும் மொழியின் பேச்சு
நடை உடை நயமாய்க் கொண்ட
நல்ல தாய்க்குரிய நெஞ்சம்
கொடையினில் மகிழும் பண்பு
கொள்கையிற் தவறாச் சீர்மை
விடைபெறும் காலம் வந்து
பிரிவுறும் போது நெஞ்சம்
உடையுதே உள்ளம் அன்பின்
நிர்மலம் நினைவிற் தேங்கி
தடையிலா எண்ணம் கோடி
பெருகுதே அம்மா என்றும்
விடையவன் அருளினோடு
வெற்றிகள் வாழ்வாய்க் கொண்டு
குடும்பத்தில் சிறப்புகள் பெற்று
வாழ்கவே ஆண்டுகள் கோடி
வளம் பல கண்டு நீடூழி
வாழ்த்துகின்றேன் மனம் நிறைந்து.

**திருமதி. அ. செ. சாள்ஸ்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி ர. ஞானதாஸ்

## அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

---

## நெஞ்சம் மறக்குமா?

மணி விழாக் காணும் நாயகி
திருமதி நிர்மலா பஞ்சலிங்கம் ஆசிரியர்,
பெண்மையின் முதல் உருவம்
எல்லோருக்கும் அன்னை போன்றவர்
புங்குடு தீவினில் உதித்த பொன்மலர்
நயினை நாகபூசணி அம்மனின் திருவுருவம்
துணிவு, பணிவு, தூய்மை, நேர்மை எனத்
துலங்கிடும் பண்புகளைக் கொண்ட அன்பான ஆசிரியர்
மனையில் மாணவர்கள் கண்டிராத பலவற்றை
மழலைகளுக்கு பார்த்துப் பார்த்துச் செய்வார்
இதுவே அன்னையின் இரக்க குணம்
அன்னையின் அரவணைப்பில் நாம் வளர்ந்தோம்.
அன்பு வழிதனில் எமக்கு அறங்கள் பல
போதித்து அகிலத்தில் உயர்ந்தோங்க
அரிய வழிகாட்டிய ஆசானாவார்
விநாயகரின் அருளுடன் விக்னேஸ்வராவில்
காலடி எடுத்து வைத்து நல்ல பணிகளை
திறம்படச் செய்தவர். அவர் பணிகளை அளவிட முடியாது.
அறுபது வயதினில் இளைப்பாறுகின்றார்.
இவர் ஆற்றிய பணிகள் எமது பாடசாலையில்
நாளை விருட்சமாகத் தோன்றும்
இவரது வாழ்வும் பெரிய விருட்சமாக வாழ்கவே
இல்லற வாழ்வும் செழித்திட நயினை
அம்மனை வேண்டுகின்றேன்.

திருமதி. ர. ஞானதாஸ்
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி யசோதரா தேவானந்தம்

**அவர்கள்**

**வழங்கிய**

# வாழ்த்துச் செய்தி

---

## நல்லாசான்

எங்களில் ஒருவராய் இருந்த நற்சோதரி
இதயத்தால் நெருங்கிய நிர்மலா பஞ்சலிங்கம்
சங்கடம் அணுகாச் சாதனையாளராய்ச்
சகல துறைகளில் சரித்திரம் படைத்தவர்
புங்குடு தீவினில் பொன்மலர் தோன்றிலும்
புரட்சிக்கவியின் புதுமைப்பெண்ணிவர்.

மங்கிடா ஆசிரியை! மாண்புறு பிரதியதிபர்
மாணவர் மனமறிந்து கற்பிக்கும் திறலினர்
துணிவு, பணிவு, தூய்மை, நேர்மை
துலங்கிடும் பண்புடன் இருபது ஆண்டுகள்
அணிபெற விக்கேஸ்வராலில் பணி செய்து
அறுபது வயதினில் இளைப்பாறுகின்றார்.

கனிதரும் விருட்சமாய் இனியவை தெய்தவர்
காலங்கள் மீதியும் களிப்புடன் வாழ்கவே!
நனி சிறந்தோங்கிடும் நன்மைசேர் இல்லறம்
நாளும் செழித்திட நல்புரி விநாயகா!

ஆசிரியை

**திருமதி யசோதரா தேவானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக ஆசிரியை

# திருமதி க. கிளின்ரஸ்

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

## மணி விழா வாழ்த்துக்கள்

எமது கல்லூரியின் ஆசான் திருமதி. நிர்மலா பஞ்சலிங்கம் அவர்கள் 60 ஆவது அகவையை பூர்த்தி செய்வதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அதே வேளையில் எமது கல்லூரியின் கல்விச் செல்வம் ஒன்றை இழப்பதை இட்டு மனவருத்தம் அடைகின்றேன்.

இவர் தமது 20 வருடங்களை இக்கல்லூரியில் கற்பித்தல் செயற்பாடுகளிலும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டவர். நான் இப்பாடசாலைக்கு முதல் முதலில் வரும் போது அவரை சந்தித்த போது கண்டிப்பான ஒருவராக கணித்தேன். ஆனால் அவருடன் பழகும் போது கண்டிப்பு கருணை, அன்பு, பாசம் எல்லாவற்றின் கலவையாகவும் நல்ல தோழியாகவும் ஒரு தாயின் உணர்வையும் எனக்கு அளித்தார்.

மாணவச் செல்வங்கள் அனைவரதும் பிரச்சினைகளுக்கு தோளோடு தோள் நின்று பல வழிகளிலும் அவர்களது பிரச்சினைகளை முன்னின்று தீர்த்து வைத்தார்.

"முதலில் நீ தொண்டனாக இருக்கக் கற்றுக் கொள், பதவி தானாக வரும்" எனக் கூறினார் சுவாமி விவேகானந்தர். அவருடைய வாக்கிற்கிணங்க தன் சேவையை நேர காலம்பாராது தொண்டாகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய திருமதி. நி. பஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரியின் பிரதி அதிபராக கடமை புரிந்தார். நிர்வாகத் திறமையுள்ள அவரின் செயற்பாடுகளால் அதிபர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் எல்லாம் குறைவாகவே இருந்தன. நிர்வாக சேவைகள் பலவற்றையும் தானே பொறுப்புணர்ச்சியுடன் செய்து இலகுவாக்கினார். இவரது சேவை தொடரடந்தும் எம் கல்லூரிக்கு கிடைக்காதா என ஏங்கி நிற்கின்றேன். இவரது ஓய்வுக்காலம் நலமாக அமைந்து நற்பணிகளில் அவர் ஈடுபட இறைவன் அருள் புரிவாராக.

ஆசிரியர்

**திருமதி. க.கிளின்ரஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக ஆசிரியை

# திருமதி நளாயினி ஞானசேகரன்

அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

---

## மணி விழாவின் அகல் விளக்கு

மணி விழாவின் அகல் விளக்கே!
சர்வ வல்லாள் நீரே
புதிதாக இணைந்தவள் யான்
எவ்வாறு அறிவேன் உம் முழுமையை
இருப்பினும் என் மனவெளிப்பாட்டின்
ஓரிரு துளிகள் இங்கே

மறைந்த என் அன்னையின்
கண்டிப்பான அன்பதனை
மறைமுகமாக ரசிப்பேன் யான்
எந்நாளும் உம் உருவில்

நின் பார்வை வெளிப்படுத்தும்
பல்வேறு கட்டளைகளை
மனத் துணிவுடன் செயற்படுத்தும்
துணிச்சலான செயற்பாடுகளை
ரசித்து மகிழ்வேன் யான்
நித்தில நின் செயல் வெளிப்பாட்டில்
முழுமையான சேவையை
நிறைவாக ஆற்றி
ஓய்வு பெறும் பூரண நிலவே
தங்கள் குடும்பத்தினருடன்
நிறைந்த வாழ்க்கையை
வாழ வேண்டுமென
இறைவனை இறைஞ்சுவேன் யான்.

**திருமதி. நளாயினி ஞானசேகரன்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்

# திருமதி றோ. மா. பவானந்தன்

அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

## உங்கள் புகழ் என்றென்றும் வாழட்டும்

எழு பிறப்பையும்
ஏற்றமுறச் செய்தீர்கள்
உழலும் உள்ளங்களை
உறுதிபெறச் செய்தீர்கள்
தழைக்கும் எண்ணங்களில்
தனிச் சிறப்புப் பெற்றீர்கள்
உழைக்கும் எண்ணத்தை
உள்ளத்தில் ஊட்டினீர்கள்

கல்விக் கண்வழி
நுழைத்த கடவுளே
பிழைத்து பரவச ஆனந்தத்தில்
திழைத்தனர் பலர்
கற்ற கல்வியை கருத்துடன்
கரைபுரண் டோட
மாணவர் பெற்ற கல்வியை
பேணிட வழிசொன்னீர்

நற்பணி அனைத்தையும்
நலமுற செய்தீர்கள்
அதிகார விளிம்பு வரை
அன்புடன் நடந்தீர்கள்
ஆசிரியர்க்கெல்லாம் அறிவுரை செய்தீர்கள்
வாழ்வைக் கற்றோம் வளம் பல பெறுக!
ஊழி உள்ளவரை - உங்கள் புகழ் வாழட்டும்

**திருமதி றோ.மா. பவானந்தன்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In our hearts

Nirmala……

A Charming lady of

Vigneswara….

Likes being calm

And happy

An amazing ladder

With amusing manner.

A guide of the students

With wide knowledge

Always pleasure and

Significance of the

Legend of Vigneswara.

**Mrs. Nilanthi Jeyapathy**

(Teacher)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## என் ஆசான்

வாழ்க்கை ஒரு பயணம்
சில உறவுகள் நிலைப்பதில்லை
சில உறவுகள் களைப்பதில்லை
இப்படியாக மனித வாழ்வில்
எத்தனை எத்தனை பரிமாணங்கள்
ஒவ்வொரு வளர்ச்சிக்கும்
ஒவ்வொரு ஆசான்
எனக்கு மட்டும் இவர் அம்மா
எனக்கு மட்டும் இவர் அப்பா
எனக்கு மட்டும் இந்த உறவு
எனச் சொல்ல எத்தனையோ
பந்தங்கள் உண்டு வாழ்வினிலே!
ஆனால் எனக்கு மட்டும் தான்
இவர் ஆசான் எனச் சொன்னவர் எவரும் உண்டோ
இந்த உலகில்
எங்கள் வாழ்க்கைப் பாதையில்
எத்தனையோ ஆசான்கள் கண்டோம்
ஒவ்வொரு படிக்குப் பிறகும் மறக்கமுடியாத பிரிவு
இதோ வந்தது இந்த நொடியும்
இலக்கணம் கற்பித்த துரோணருக்கு
ஏ கலைவன் எனது நன்றி சமர்ப்பணம்
எனக்குக் கற்பித்த காலம் சிறிதே எனினும்
கற்றுக் கொடுத்த கல்விக்கு உண்டோ வரையறை
இலக்கணங்கள் எப்படி மாறாதோ அப்படியே
நீங்கள் கற்பிக்கும் பாங்கதனால்
உங்கள் நினைவுகளும் நீங்காது.

**கா. கஜீபன்**
2009இல் க.பொ.த.சாதாரண தர மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2009ம் ஆண்டு பழைய மாணவன்
# திரு. செ. துவாரகன்
## அவர்கள்
## வழங்கிய
## வாழ்த்துச் செய்தி

உங்களை வாழ்த்துகின்றேன் - என்றும்
உங்கள் செயல் போற்றுகின்றேன்
இனிவரும் காலம் இனிதாய் அமைய
வாழ்த்துக்கள் கூறுகின்றேன் - நான்
வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

பல கலைகளை கனிவாக்கி
பண்புடனே கற்பித்தீர்கள்
தாயாக எம் மனம்
முழுதும் நிறைந்தீர்கள்

மாணவன் யான் உங்கள் செயல் கண்டு
மனமார வாழ்த்துகின்றேன்
மகிழ்ச்சியாய் கூறுகின்றேன்
உங்கள் ஓய்வு தினமான இன்று
உங்கள் ஓய்வு தினமான இன்று.......

**திரு. செ.துவாரகன்**
(2009ம் ஆண்டு பழைய மாணவன்)
இலங்கை மின்சார சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You empowered us

With the Power of knowledge

You motivated us

With the best tutelage

You helped us move ahead

With unending motivation

As a leader and a human being

You are a true inspiration.

2009 Batch Students
**Thuvaragan, Janooran,**
**Kajeepan, Nirojan,**
**Tharsmala, Lathusiya,**
**Nithila, Partheepa**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அகவை அறுபதிலே கால்பதித்த எம் அன்னை

எம் இனிய தமிழ் ஆசானே.

தாய்க்குத் தாயாக எம்மை ஒரு சேயாக நினைத்து அன்பாக கல்வி புகட்டும் உம் கற்பித்தலின் மேன்மையை நாம் அறிவோம். உங்களை காணும் ஒவ்வொரு நொடியும் நீங்கள் கற்பித்த நற்குணங்கள், கல்வி என்பவை மனத்தில் தோன்றி மறையும். உங்களால் நாம் பெற்ற பேறுகளுக்கு அளவேது. எம் ஆரம்பக்கல்வி முதல் இன்று வரை தொடர்ந்து வந்த உம் பந்த உறவின் இனிய முகத்தை என்றும் மறவோமே.

எமது தவறுகளைத் திருத்தி எமக்கு நல்வழி காட்டி எமை உயர்த்த ஆசிரியர் எனும் மகத்துவமான பதவியிலே நின்று எமக:கு துணை புரிந்தீர்கள். இப்பாடசாலையை சிறந்த கல்விக்கூடமாக மாற்றி எமது மாணவர்களுக்கு உமது நற்குணங்களை ஊட்டி சிறந்த மாணவர்களை உருவாக்கும் ஆசிரிய சேவையிலே உங்களது சேவை அளப்பரியது. உங்களை நினைத்து நாம் அகமகிழும் வேளைதனில் எம் சிரம் தாழ்த்தி வணங்குவதோடு இந்நாளிலே நீண்ட காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

மாணவி

**செ. சர்மினி**

தரம் 11

நமது வருமானங்கள் நமது காலணிகளைப் போன்றதே சிறியதாக இருக்குமானால் நம்மைக் கடிக்கிறது. மிகப் பெரியதாக இருக்குமானால் தடுக்கி விழச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசான்

நாங்கள் தங்களை விடப் பெரிய ஆளாக
வந்திடுவோதம் என்று பொறாமைப்படாத
ஒரே ஒரு தெய்வம் தான் எங்கள்
ஆசான்.

எங்களை ஆளாக்கி விடவேண்டும்
என்ற இலட்சியக் கனவோடு பாடசாலை வரும்
ஒரேயொரு ஜீவனும் எங்கள் ஆசான் தான.

நாங்கள் பரீட்சையில் சித்தியடைந்தபோது
எங்கள் பெற்றோரை விட அதிகம் சந்தோசப்
படுவது எங்கள் ஆசான் தான்.

மாணவன்
கு. சசிகரன்
தரம் 11

**சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்**

✿ உண்மை தூய்மை சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அகவை அறுபதில் காலடி எடுத்து வைத்திருக்கும் எமது பாசமிகு அன்னையே! தாய்க்கு தயாக தந்தைக்குத் தந்தையாக நல் ஆசானாக எம்முடன் உறவாடி எம்மை வழிநடத்தி நல்வழி காட்டினீரே! உம்மைப் போற்றிக் கூற எம்மிடம் வார்த்தைகள் ஏது? உங்களது கனிவான பேச்சிலே எம்மை நாம் மறந்தோம். நாம் விடுகின்ற தவறுகளை எல்லாம் திருத்தி எம்மை உங்களது பிள்ளைகளாகக் கருதி மன்னித்திடும் உங்கள் குணமும், எல்லோரையும் மதிக்கும் பண்பும் உங்களிற்கு மேலும் உயர்வைத் தரும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் கம்பீரநடையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்த நாட்கள் உண்டு. நீங்கள் இப்பாடசாலையில் திருப்தியுடனும் நிறைவுடனும் ஆற்றிய சேவைகள் பாடசாலையை விட்டுப் பிரிந்தாலும் எல்லோரது மனங்களிலும் என்றுமே நிலைத்திருக்கும் . உங்கள் அறிவுரை கேட்டு நாம் இன்று வாழப் பழகினோம். நாம் தீயவழியில் நடந்தாலும் எமக்கு நல்வழி காட்டி எமது உயர்விற்காக போராடிய உங்களிற்கு என்றும் நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருப்போம்.

நீங்கள் எமக்குச் செய்த நற்செயல்களுக்கு "நன்றி" எனும் சொல் போதாது. என்ன புண்ணியம் செய்தோமோ? இப்பாடசாலைக்கு நீங்கள் வரப்பிரசாதமாக கிடைத்ததற்கு. இப்பாடசாலைக்காக நீங்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. எம் ஆசானே! நீங்கள் வாழும் காலம் வரை பல பேறுகள் பெற்று நோய் நொடியின்றி நலமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

மாணவி

**க. ஜீவிதா**

தரம் 11

> விரும்புவதற்கும் நேசிப்பதற்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?
> நீங்கள் ஒரு மலரை விரும்பினால் உடனே அதை பறித்து விடுவீர்கள்.
> நீங்கள் அந்த மலரை நேசித்தால் அந்த செடிக்கு நீர் ஊற்றுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புடைய ஆசான்

எம் அன்பு ஆசான் திருமதி நிர்மலா பஞ்சலிங்கம் ஆசிரியர் அவர்கள் மிகவும் அன்பும், பண்பும், கனிவும், அடக்கமும் உருவான ஆசிரியர். நான் பல ஆசிரியர்களிடம் கல்வி கற்றுள்ளேன். என் தமிழ் ஆசிரியரான பஞ்சலிங்கம் ஆசிரியரிடம் 4 வருடமாக தமிழ் கற்று வருகின்றேன்.

இவர் எமக்கு நன்கு விளங்கக்கூடிய வகையில் கற்பித்து நான் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்று என்னை இன்று வரை தமிழில் உயர்ந்து நிற்க வைத்தவர் என் அன்பான ஆசிரியரே. நாம் தவறு செய்யும்போது ஓடி வந்து தன் பிள்ளை தவறு செய்தது போல அன்புடனும், கண்டிப்புடனும் திருத்துவார்.

எப்போதும் எம் பாடசாலை நினைவாகவே இருந்து மாணவர்களைப் பற்றியே சிந்திப்பார். எம்மை எவ்வாறு பரீட்சையில் சித்தியடையச் செய்வது? இம் மாணவர்களை எப்படி நல்வழியில் கொண்டு செல்வது? என ஓய்வு நேரங்களிலும் எம் நினைவாகவே காணப்படுவார். நடப்பதிலும், உண்பதிலும், இருப்பதிலும் நாம் அவரின் கம்பீரத்தைக் கண்டு வியந்து நிற்போம். நான் தரம் 9ல் அவரிடம் கற்கும்போது தமிழ் நன்கு செய்வேன். அதனால் அவர் என்னிடம் அதிகமாகவே அக்கறை காட்டினார். நான் சிறு பிழையேனும் விட்டால் உடனேயே சுட்டிக்காட்டி அன்புடன் அதைச் சொல்லித் தருவார்.

நம் அனைவருக்காகவும் நாம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று எங்களுக் காகவே செயற்பட்ட ஆசிரியர். இன்று எம்மிடம் இருந்து பிரிந்து போகின்றமை எமக்கு மிகவும் வருத்தமளிக்கின்றது. நாம் அனைவரும் தமிழ்ப் பாடத்தில் நல்ல புள்ளி பெற்று நல்ல மாணவர்கள் என்ற பெயரைப் பெறவேண்டும். இதுவே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த கௌரவமாகும்.

மாணவி

**யோ. கெங்கேஸ்வரி**

தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்போமா உங்களைத்தான்

தேனான கவியொன்று
செந்தமிழில் நான் பாடுவேன்
பாங்கான பாட்டொன்று
பண்ணாக நான் பாடுவேன்
பஞ்சலிங்கம் மிஸ் என்று
பணிந்து நான் தொழுதிடுவேன்.

மணிவிழாக் காணும் நாயகி அவர்
பணி வாழ்வில் முடி சூடியவர்
இனிக் காணும் சேவையென
கனிந்து காலம் மறைந்தாலும்
போக நாம் விடலாமா
பஞ்சலிங்கம் மிஸ்ஸை.

பள்ளியைச் சுற்றிச் சுற்றிப்
பட்டாம் பூச்சிபோல அவர்
பட்டுப் பாதங்கள் பஞ்சாய் நோக
சுற்றுச் சூழலதை தினம்
சுத்தம் செய்யும் எம்
சின்னம் சிறாரை வழிப்படுத்தினாரே.

அன்பாக எமை அணைத்து
பண்பாகக் கதைகள் பல பேசி
கண்ணான கல்விதனை
கருத்தாகக் கற்றுத் தந்த
கண்கண்ட தெய்வம் எங்கள்
பஞ்சலிங்கம் மிஸ்.

வாழ்வெல்லாம் இன்பம் பெற்று
வளமுடன் வாழ்க என்று
வாழ்த்துகின்றோம் எம்தாயை
வாழ்வதிலே இனி நாங்கள்
மறப்போமா உங்களைத்தான்
உங்களின் அடிச் சுவட்டைப்
பின்பற்றி நாம் வாழ்வோம்.

**ஜீ. அஞ்சனா**
தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசான்

நாங்கள் தங்களை விடப் பெரிய ஆளாக
வந்திடுவோம் என்று பொறாமைப்படாத
ஒரே ஒரு தெய்வம் தான் எங்கள்
ஆசான்.

எங்களை ஆளாக்கி விடவேண்டும்
என்ற இலட்சியக் கனவோடு பாடசாலை வரும்
ஒரேயொரு ஜீவனும் எங்கள் ஆசான் தான்.

நாங்கள் பரீட்சையில் சித்தியடைந்தபோது
எங்கள் பெற்றோரை விட அதிகம் சந்தோசப்
படுவதும் எங்கள் ஆசான் தான்.

மாணவன்
**கு. சசிகரன்**
தரம் 11

☞ தாங்கள் மட்டும் பிழை செய்யாமல் இருந்தால் போதாது பிறர் பிழை செய்வதற்கும் இடம் கொடுக்கக்கூடாது.

☞ நான் மெதுவாக நடப்பவனாக இருக்கலாம். ஆனால் ஒருபோதும் பின் செல்ல மாட்டேன் – ஆபிராம் லிங்கன்

☞ உங்கள் பிள்ளைகள் நல்லவர்களாக இருந்தால் உங்கள் சொத்து அவர்களுக்கு தேவையில்லை. உங்கள் பிள்ளைகள் கெட்டவர்களாக இருந்தால் உங்கள் சொத்து அவர்களுக்கு பயன்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகியின் கல்விப் பயணம்

I. தரம் 1, 2 - பதுளை சரஸ்வதி வித்தியாலயம்

II. தரம் 3 - தரம் 5 வரை - புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலை

III. தரம் 6 - தரம் 8 வரை - புங்குடுதீவு மகா வித்தியாலயம்

IV. தரம் 9 - பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வரை - யாழ். இந்து மகளிர் கல்லூரி

V. முதற் பட்டம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
B.A. 1977 - 1980

VI. பட்டப்பின் கல்வி டிப்ளோமா
Dip. in Edu. 1995/1996

## மணிவிழா நாயகியின் கல்விச் சேவையில்

I. 1982 ஒக்ரோபர் - மே வரை - நுவரெலியா கந்தப்பளை மெதடிஸ்த மிஷன் பாடசாலை

II. 1986 ஜூலை - 1989 மார்ச் வரை - வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலை

III. 1989 ஏப்ரல் - 1996 மே வரை - புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்

IV. 1996 ஜூன் - இன்று வரை 05-02-2016 - யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

**சேவையின் நாயகியை சிரம் தாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம்.**

**யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா**
**வித்தியாலயக் குடும்பம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழா நாயகியின் பெற்றோர்
ஆசிரிய தம்பதிகள்



மாணவியாக




மணிவிழா நாயகியின் முதல்பட்டமளிப்பின்போது



அன்புச் சகோதரியின் குடும்பம்



மணமகளாக



திருமண வைபவத்தின்போது



அன்புத்தம்பியின் திருமணத்தின் போது திரு. திருமதி பஞ்சலிங்கம் பஞ்சபுத்திரன்



சிரேஷ்ட மைந்தனின் பட்டமளிப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினமும் காலை 7.00 மணிக்கு பாடசாலை முன்றலில்



இல்ல விளையாட்டுப் போட்டி 1999



உப அதிபரின் வாழ்த்துரை



இல்ல மெய் வன்மைப்போட்டி விருந்தினருடன்—2015



பான்ட் வாத்தியக் குழுவினருடன்



ஆசிரியர் தினவிழா—2015



மாணவதலைவர்களுடன்—2015



தைப்பொங்கல் விழாவில்—2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மூன்று தலைமுறைகளைக் கற்பித்து நெறிப்படுத்தி நிறைவு காணும்
ஆசிரியச் செம்மலை நன்றியோடு கல்வி உலகம்
தொழுது நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ரிகலர்ஸ் பதிப்பகம்.கிளிநொச்சி - 0775562963